26878

ஸ்ரீ



ஸ்ரீ லெக்ஷ்மிநரஸிம்ம பரப்ரம்மணேநம:

# ஆச்சாரிய பக்தி.

ஓரியண்டல் ஸ்டீம் பிரஸ்,

பௌரங்கிப்பேட்டை.

1920.

ஸ்ரீ



## ஸ்ரீமதே ராமானுஜாய நம:

1. இவ்வுலகில் சகல ஜீவராசிகளுக்கெல்லாம் மேலான தாய் பகுத்தறிவு ஞானத்துடன் மானிடரூபந் தரித்தும் ஜென்ம மெடுத்ததற்கு சிரேஷ்டமான பலனையடைய விரும்பாமல் இவ்வுலக வாழ்க்கையை சாசுவதமென்று நம்பிச் சிற்றின்பத்தில் மூழ்கி முறைதப்பி நரஸ்துதியினாலேற்பட்ட கெம்பீரமான தற்பெருமை சிரசிலேறித் தங்கள் சாதுர்யமான புத்தி நுட்பத்தினால்தான் பிரபஞ்சத்தில் சகலமும் நடக்கிறதாய்ச் சொல்லிக்கொண்டு "மாதா பிதா குரு தெய்வம்" இவர்களைக் கனவிலேகூட நினைக்காமல் மோக்ஷம் நரகம் என்ற பதங்களைச் செவியிலேகூட யேறவொட்டாமல் நிலையற்ற தற்புகழ்ச்சி நரஸ்துதி இவைகளில் மூழ்கி யிருக்கிறவர்களுக்கே முக்கியமாய் நல்ல ஞானத்தை உண்டுபண்ணும் பொருட்டு கருப்பத்தில் கஷ்டப்பட்டுக் காப்பாற்றிப் பெற்றெடுத்த மாதாவை முதலிலும் ஷை கருப்பத்துக்குக்காரணமா யிருக்கப்பட்ட பிதாவை அடுத்த ஸ்தானத்திலும் சன்மார்க்கங்களை உபதேசிக்கிற குருவை மூன்றாவது ஸ்தானத்திலும் கடைசியில் தெய்வத்தையும் வைத்து வழங்கிவருகிற "மாதா பிதா குரு தெய்வம்" யென்ற தமிழ் வசனத்தை ஆராய்ந்து

பார்க்கும் விஷயத்தில் முதல் மூன்று பேர்களுடைய கிருபை யன்னியில் பகவானுடைய ஸேவையும் கைங்கரியமும் கிடைக்க மாட்டாதென்று நிச்சயமாய் நம்பி அனுஷ்டிக்க வேண்டியதற்கா கவே ஷை வசனம் யேற்பட்டிருக்கிறபடியால் அதை யனுசரித் துதான் பிரயத்தனப்பட்ட காரியம் நிர்விக்கினமாய் நிறைவே றும் பொருட்டு அனுஷ்டிக்கவேண்டிய வழிகளையும் மாதா பிதா குரு இவர்களே அதற்கு முக்கிய காரண பூதர்களா யிருக்கிறார் களென்பதையும் அவர்களையே பயபக்தியுடன் பூஜித்து வந்தால் இகபர சுகங்களையும் மோக்ஷத்தையு மடையலா மென்பதையு முபதேசிக்கிற தென்றால் செவிடர் காதில் சங்குத்தொனி செய் ததற்கு சமான மாகுமே யல்லாது படுஞ்சிரமத்திற்குப் பலன் யேற்படுவது ரொம்ப துர்லப மாகையால் அப்பேர்ப்பட்ட சன் மார்க்கங்களை யறிந்துகொள்ள முடியாதவர்கள் கிருபைகூர்ந்து இந்தப் பத்திரிகையை முழுவதும் வாசித்துப்பார்க்கும் விஷயத் தில் சிரசுக்கேறி யிருக்கிற தற்பெருமை பித்தமானது இறங்கி ஞான வெளிச்சத்தினால் அஞ்ஞானக் கடலிலிருந்து கறையேறி அவரவர்களின் குருவை நாடிப்போய் சன்மார்க்கங்களை யறிந்து எடுத்த ஜென்மம் வீணாய்ப் போகாமல் இசசென்மத்திலேயே இக பர சுகங்களையும் மோக்ஷத்தையு மடையும்படி செய்விக்குமென் பதில் சந்தேகமில்லை யென்ற விஷயத்தை அவர்கள் மனமே பஞ் சபூத ஸாக்ஷியாய் யெடுத்துறைக்குமென்று அடியேனுக்குத்திரி கரண சுத்தியாய் யேற்பட்ட நம்பிக்கை.

2. இக்காலத்திலப்பேர்பட்ட நம்பிக்கை அடியேனுக்குண்டா னதற்கேற்பட்ட விஷயங்களை காரணங்கள்ஸகிதம் யெடுத்துரைக் காதவிஷயத்தில் அடியேனே 'பித்தன்' என்று சொல்லப்படும்படி நேரிடுமென்பதை யுணர்ந்து அப்பேர்ப்பட்ட ஆக்ஷேபணைகளுக் கிடமன்னியில் அவைகளை விரித்துறைக்க வேண்டிய தவசியமா கையால் இக்கலியுகத்தில் அதுவும் பாபம் நிறைந்த இக்காலத்தில் மனுஷியர்களால் ஆரம்பிவித்து செய்து முடிப்பதற்கு ரொம்பக் கடினமானதும் மகா ஆச்சரியத்தை விளைவிக்கிற அற்புதமான

காரியங்கள். ஒருமனிதன் மூலமாய் ஆசார நேம நிஷ்டையுடன் சரீர சௌக்கியத்தை கவனிக்காமல் பண்ணின பிரதிஞ்ஞைப் பிரகாரம் நிர்விக்கினமாய் யாதொரு ஸங்கட மன்னியில் நிறைவேறிக்கொண்டு வந்தால் இக்காலத்தில் அப்படி நடக்கிறதானது மாதா பிதா குரு இவர்களுடைய அனுக்கிரகத்தின் பேரில் பகவானுடைய பரிபூரண கடாக்ஷத்தினுல்த்தான் நடக்கிறதாய் நினைக்கவேண்டுமே யல்லாது மற்றப்படி மனுஷ எத்தனத்தினுல் நடக்கிறதென்று நினைக்க கொஞ்சங்கூட காரணமேயில்லை என்பதை யாரும் சுலபத்தி லறிந்துக் கொள்ளுவார்களென்ற நம்பிக்கையின் பேரில் அப்பேர்ப்பட்டக் காரணங்களை யறிந்து அதின் பிரகாரம் மாதா பிதா குரு இவர்களிடத்தில் விசுவாசத்தை நாட்டிபயபக்தியுடன் பூஜித்து சன்மார்க்கங்களை யறிந்து இகபர சுகங்களையும் மோக்ஷத்தையும் யாவரு மடைந்து ஆநந்தப் படவேணுமென்ற கோரிக்கையின்பேரில் இப்பத்திரிகை எழுதப்பட்டிருக்கிறதைத்தவிர இவ்வுலகிலேற்பட்ட நரஸ்துதி கியாதி கௌரவம் முதலியதுகளை யபேட்சித்து எழுதப்படவில்லை யென்பது ஸத்தியம்.

3. அப்படி ஸத்தியந் தவருமல் பண்ணின பிரதிஞ்ஞையைக் காப்பாற்றிக் கொண்டுவரும் அப்பேர்ப்பட்ட மனுஷனுடைய ஆதிமுதலிதுவரையிலுள்ள விருத்தாந்தத்தை யறிந்து அப்பாலதிலிருந்து ஆச்சார்ய பக்தியினு லேற்பட்ட விஷயங்களையறிந்து கொள்ளவேண்டியது ரொம்ப முக்கியம்.

"பரித்ராணய ஸாதூனும், விநாசாயச துஷ்கிருதாம், தர்ம ஸம்ஸ்தாபனர்த்தாய, ஸம்பவாமி யுகே யுகே" என்றபடி துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்து தருமத்தை நிலை நிறுத்துவதாய் தேவர்களுக் கபயங் கொடுத்து பண்ணின பிரதிஞ்ஞையைநிறைவேற்றும் பொருட்டு பகவான்பூலோகத்தில்மனுஷியாவதாரமாய் தெசரத மஹாராஜனுக்குப் புத்திரனுய்ப் பிறந்து "மாதா பிதா குரு தெய்வம்" இவர்களை பயபக்தியுடன் பூஜித்து நடந்துவரவேண்டிய ஒழுக்கங்களை யெல்லாம் விவரித்துக்காட்டி

பிதுர் வாக்கிய பரிபாலனர்த்தமாய் இராஜ்ய பட்டாபிஷேகத்தைப் பெரிதாக நினைக்காமல் தெண்டகாரண்யஞ்சென்று துஷ்ட நிக்கிரகஞ் செய்து சிஷ்ட பரிபாலனம் பண்ணி தருமத்தை நிலை நிறுத்திய ஸ்ரீ ராமபிரானால் சேது பந்தனத்துக்காக முதலில் நவக்கிரகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்தலமாகிய ஆதிஸேது வென்ற நவபாஷாணத்தில் சடாக்ஷர பந்தன சகட ரத்தினக்கொடியாம்ச ரேகையை யுடையவன் பிரம்ம குலத்தில் தெசரதனின் முதல் சேயனின் நாமந்தரித்துப் பூமியில்பிறந்து தன்னால் சொல்லப்பட்ட பலாபலன்களை அடைவானென்று மஹா தவ சிரேஷ்டராகிய ஸௌக பிர்மரிஷியால் பரீட்சித்து மஹாராஜாவுக் குறைத்த பிரகாரம் ஷை ரேகையை யுடைய அடியேன் நவபாஷாணத்தில் பிராமணகுலத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஜென்மமெடுத்து "கோதண்டராமன்" எனப் பெயரை வகித்து மாதா பிதாக்களின் ஸவரக்ஷணையிலிருந்து வளர்ந்து சுய பாஷையுடன் அரசர் பாஷையுங் கொஞ்சங்கற்று முயர்வேறுமல் மதுரை நகரில் வழக்கின் முறையறிந்து வரையல் தொழிலிலமர்ந்து முன்கரும ருது தோஷமுள்ள மங்கைதன்னை மணமுடிந்து தெளிவேறுத உத்தி யோகத்தில் கிடைத்த வரும்படி செலவுக்குப் போருமல் அக்காலத்தில் மதுரையில் கட்டப்பட்ட கிரகத்தின் கடன் ஹிம்சையால் "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற பழமொழியை அனுசரித்து யெவ்விடம் போயாவது கஷ்டப்பட்டு திரவியம் சம்பாதித்துக் கடனைத்தீர்த்து கிரகத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேணுமென்ற ஆவலின்பேரில் பாரியை ஸகிதம் மதுரையைவிட்டு வெளியேறிச் சென்னப்பட்டணம் வந்து ஆறு மாசகாலம் ரென் பென்னெட்டு அண்டு கம்பெனியென்ற வெள்ளைக்காரர் ஷாப்பில் வேலைக்கமர்ந்து அந்த ஷாப்பில் பிராமண யோக்கியதையைக் காப்பாற்றிக் கொள்ளுகிறதில் அதிககஷ்டமாயிருந்ததை யுத்தேசித்து அதைவிட்டு விலகி அப்பால் பாரென் அண்டு கம்பெனி என்ற ஔஷத கம்பெனியாரின் யேஜண்டாக "மேருவொட்ட கனகமுண்டு மேருதன்னில் பாலன்செய் கோலம் ரொம்ப பண்

டிதங்கள் வெண்மாக்கள் பரிக்ஷையொடு பதந்தெறிந்து ஔஷதங்கள் கொடுத்து மேலாய்க் கண்டிதமாய்ப் பொருள் பொன் சேர்ப்பான்'' என்று ஸுக பிர்மரிஷி அருளிய வாக்குப் பிரகாரம் ஸ்வர்ணம் விளையப்பட்ட இக்கோலார் இராபர்ட்ஸன் பேட்டைக்கு 1905௵ அக்டோபர்௴ 3௳ வந்து பஞ்சபூத சாக்ஷியாய் தெய்வத்துக்குப் பயந்து எஜமான் துரோக மன்னியில் ரொம்ப சிரமமெடுத்து வெளியில்போய் ஷெ பாரென் கம்பெனியாரின் ஔஷதங்களைப்பற்றி ரொம்பப்புகழ்ந்து வெள்ளைக்காரர்களுக்குக்கொடுத்து அனேகம்பேர்களுக்கு சௌக்கியமாய் அதுமுதல் அவர்களுடைய அன்புக்குப் பாத்திரனாகி வியாபாரம் விருத்தியடைந்துகொண்டுவருஞ் ஸமயத்தில் பாரென் கம்பெனியார் யேதோ கிரகச்சார தோஷத்தினால் சிரமத்தை யடைந்து ஷெயார் வியாபாரத்தை நிறுத்தினவுடன் இவ்வூரில் நடந்துவந்த வியாபாரமானது ரொம்ப லாபகரமா யிருந்ததை யுணர்ந்து அந்த மருந்துகளுடன் இன்னும் அநேக அன்னியதேசத்து மருந்துகளையும் தருவித்து வைத்துக்கொண்டு "மாதா பிதா குரு தெய்வம்" இவர்களை பயபக்தியுடன் பூஜித்து அவர்கள் மூலமே நன்மையை அடையவேணுமென்ற கருத்துடன் பஞ்சபூத சாக்ஷியாய்ப் பிறருக்கு ஒருவித தொந்தரவும் நஷ்டமு முண்டுபண்ணாமல் வியாபாரத்தை சொந்தத்தில் வைத்து நடத்திக் கொள்ளலாமென்ற தைரியத்தின்பேரில் இவ்விடத்திலுள்ள வெள்ளைக்காரருடைய அன்பின் ஆதரவைக்கொண்டு 'விக்டோரியா மெடிகல் எம்போரியம்'' என்று பெயரை வைத்து வியாபாரம் யேற்பட்டு காலக்ஷேபம் ஸுகமாய் நடந்துகொண்டு வரும்பொழுது 1916௵ ஆகஸ்டு௴ 11௳ அடியேனுடைய பாரியையும் அடியேனும் யேககாலத்தில் ப்ளேக் வியாதியால் பீடிக்கப்பட்டு ப்ளேக் ஆஸ்பத்திரியிலேயே 17௳ யன்று அடியேனுடைய பாரியை மரணமடையவே அதுசமயம் அடியேனுடைய தமையனார் தன் உயிரைப் பெரிதாகப் பாராமல் அந்த ப்ளேக் ஆஸ்பத்திரியிலேயே வந்திருந்து ஸ்திரீ சகாய மன்னியில் தானே எல்லா வேலைகளையும் பார்த்துக்

கொண்டு அடியேன் தலைமாட்டுப் பக்கத்திலேயே படுத்துக்கொண்டு "ஜேஷ்ட பிராதா பிதுர்ஸம" என்ற வாக்கியத்தை ரூபிக்கும் பொருட்டு பெற்ற பிதாவைப் பார்க்கிலும் அதிக வாஞ்சையுடன் அடியேனைக் காப்பாற்றி சக்தியைக் கொடுத்தமேல் "வன்றுபோல் சேயில்லாவாட்டத்தோடு வலுவானநோயால் மாள்வாள் சொன்னேன். சொன்னதை நீ நம்பாவிட்டால் கருமதொந்த துடர்ச்சியால் மறந்திடுவான் பாலனுந்தான்." என்று ஸுகபிர்மரிஷி திருவாய் மலர்ந்தருளிய வாக்குப் பிரகாரம் தகுந்த காலத்தில் ஷை ஸுகபிர்மரிஷியின்ரேகை சாஸ்திரத்தை வாங்கிப்பார்த்தும் கருமவினையானது ஷை சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட பரிகாரத்தை உடனே செய்ய வொட்டாமல புத்தியை மாற்றித் தடுத்து சாஸ்திரம் வாஸ்தவமென்பதை யாவரும் நம்பும்பொருட்டு ரூபிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து மனமானது கலங்கி தவித்து எல்லாம் ஈசன் செயலேயன்றி நம்மால் செய்யக் கூடியது ஒன்றுமில்லையென்ற ஞானமானது தோன்றி "அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்"என்று ஆழ்வார் ஸாதித்திருக்கிற பிரகாரம் ஞானம் உண்டான காலத்தில் தான் இப்பூமியில் பிறந்தனனென்று சொல்லியதை உறுதியாக மனதில் வைத்துச் சென்றுபோனதை கவனிக்காமல் இவ்விடத்தில் காலக்ஷேபார்த்தமாய் ஏற்பட்ட ஜீவனோபாயமானது மஹாபாபதோஷந்துக்குக்காரணமானதா யிருக்கிறதை யுத்தேசித்து பாபத்துக்குள்ளாகி நரகினில் வீழ்ந்து அவஸ்தைப்படாமலும் எடுத்த ஜென்மம் வீணாகப் போகாமலும் இக்கலியுகத்தில் கிரகதாசிர்மத்திலிருந்துக் கொண்டே வெகு சுலபமாய் இகபர சுகங்களையும் ஸாமீப்பிய பதவியையும் அடையவேணுமென்ற ஆவலின் பேரில் இவ்வுலகத்தில் சகலத்துக்கும் அக்கினியே முக்கிய காரண பூதமாயிருக்கிறதென்பதையும் அககினியன்னியில் பிரபஞ்சமே நிலைத்திருகக முடியாதென்பதையும் அதுகாரணத்தை உத்தேசித்தே முக்கியமாய் பிரம்ம க்ஷத்ரிய வைசியர்கள் அக்கினியை தாரியமாய் வைத்து உபாஸித்து வரவேண்டுமென்பதையும் இக்கலியுகத்திலக்கினியை

ஆசார நேமநிஷ்டையுடன் பயபக்தியாய்உபாஸித்துவந்தால் அது
வே ப்ரத்யக்ஷ தெய்வமாய் நினைத்தகாரியங்களை நிர்விக்கினமாய்
நிறைவேற்றிவைக்குமென்பதையும் பரமபாகவதோத்தமாள் மூல
ம் அறிந்துஅவாளுடைய ஆக்ஞைகளைசிரசில்வகித்து பிங்கள௵
அர்ப்பிசி ௴ சுக்கிலபக்ஷம் திரயோதசி அன்று ஓர் கன்னிகை
யை ஆவர்த்தனமாக மணம்புரிந்து அன்று தினம் முதற்கொண்
டே அந்த பரம பாகவதோத்தமாள் முன்னிலையில் ஷை விவாக
அக்கினியில் "யாவத்ஜீவம் யாவதாதாரம் வாதண்டுலைர்யவைர்
வாஹோஷ்யாமி" என்றவேதவாக்கியத்தின்படி பிரத்தியக்ஷத
தில் சாயம்பிராதரௌபாஸனம் தவறாமல் செய்து வருவதாய்ப்
பிரதிஞ்ஞை பண்ணி ஷை அக்கினியை ஓர்பாண்டத்தில் ஏளப்
பண்ணி அந்தப் பிரகாரம் தினந்தோறும் காலையில் தீர்த்தமாடி
பிராத ஸந்தியாவந்தனம் பண்ணி அப்பால் பிராதரௌபாஸனம்
ஸ்ரீமத் ராமாயண படனம் பகவதாராதனம் முதலிய நித்திய கர்
மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு காலக்ஷேபார்த்தமாய்
ஏற்பட்ட வியாபாரத்துக்காக பிரதி தினமும் வெளியில்போய்
வெள்ளைக்காரர்களைப்பார்த்து ஆர்டர்கள் எடுத்து சாமான்களைக்
கொடுத்துவிட்டுத் திரும்பி சாயங்காலம் கிரகத்துக்குவந்து தீர்த்
தமாடி ஆன்ஹீகங்களை முடித்துக்கொண்டு ஸாயம் ஔபாஸன
மானமேல் ஸஹஸ்ரநாம பாராயணம்பண்ணி பெருமாள் தீர்த்தம்
பிரஸாதம் வாங்கிக்கொண்டும் பக்ஷாபக்ஷந் தவறாமல் தரிசபௌ
ர்ணமி ஸ்தாலீ பாகங்களும் நடந்து வருகிறதை கவனித்துப் பார்
க்கும் விஷயத்தில் பகவானே பிரத்தியக்ஷமாய் அப்பேர்ப்பட்ட
பரம பாகவதாள் ரூபமாய் எள்ளியிருந்து அனுக்கிரகித்த மஹா
தாசீர்வாதத்தின் மகிமையே யல்லாது வேறல்லவென்று பரம
பாகவதாளன் அபிப்பிராயம்.

4. அப்பேர்ப்பட்ட பரம பாகவதாளின் கிருபையை முன்
னிட்டு அடியேனுக்கு ஆதியில் பிர்மோபதேசம் செய்து இதுவ
ரையில் ஏற்பட்ட விஷயங்களுக்கெல்லாம் காரண பூதராயிருக்
கிற அடியேனுடைய கனிஷ்ட பிதாவின் குமாரத்திக்கு சென்ற

ஆனி மாதத்தில் யேற்பட்ட விவாகத்திற்கு தாரியாக்கினி சகிதம் வருவதாய் அஞ்ஞானத்தினால் சொன்ன வார்த்தையை நிறைவேற்ற வேணுமென்ற ஆவலினால் உபவத்திகளைக்கண்டு எந்த விதம் தாரியாக்கினி ஸகிதம் போய்வரலா மென்பதை நியமிக்க வேணுமாய் அடியேன் ஆச்சாரியராகிய ஸ்ரீமது அஹோபில அழகிய சிங்கராகிய ஸ்ரீ ஆதிவெண் சடகோப எதீந்தர ஸ்ரீ ரெங்கநாத மஹாதேசிகர் ஸந்நதிக்கு பத்திரிகையை ஸமர்ப்பிவித்து பிரார்த்தித்துக் கேட்டதில் விவாகத்துக்குப் போகவேண்டியதும் ஔபாஸனத்தை நடத்தவேண்டியதும் அவசியமாயிருந்தால் மந்திர ரூபமாய் காலை மாலையில் ரயிலைவிட்டிறங்கி ஔபாஸனத்தை நடத்திக்கொண்டு இருக்கப்பட்ட இடம் வந்ததின்மேல் மறுபடி அக்கினி ஸந்தானம் பண்ணிக்கொண்டு தாரியமாய் வைத்துக் கொள்ளுகிறது சுகமானவழியென்றும் ரயிலில் தாரியாக்கினியை ஏளப்பண்ணக் கூடாதென்றும், கட்டவண்டி சரிப்படாதென்றும் அனுசிதமும் கூடயென்றும் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸன்னதியிலிருந்து ஸ்ரீமுகம் கிடைக்தவுடன் ஞானம் வந்ததின்மேல் விவாக காலத்தில் பரம பாகவதாள் முன்னிலையில் யாவத் ஜீவம் தவராமல் பிரத்யக்ஷத்தில் அந்தவிவாக அக்கினியிலேயே ஔபாஸனம் செய்துவருவதாய் பண்ணின பிரதிஞ்ஞைக்கு விரோமாய்நடக்க மனசு இடங்கொடுக்காமல் மறுபடி மோட்டார் வண்டியிலாவது போகலாமா வென்று பிரார்த்தித்ததில் மந்திரரூபமே விலாக்கியமென்றும் இல்லாத பக்ஷத்தில் ஸமித் ஸமாரோஹணம் செய்து ஸமித்தை சுத்தியாய் வைத்துக்கொண்டு எந்தவண்டியிலும் போகலாமென்றும் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ன்னதியிலிருந்து மறுபடி வந்த ஒரு கார்டில் கடைசியில் "அப்பால் அடியேன் இஷ்டம் போல் செய்து கொள்ளுகிறது" என்று எழுப்பட்டிருந்த நியமனத்தை சிரசில் வகித்து யோசித்துப்பார்த்தமேல் தாரியாக்கினியை கட்டவண்டியில் ரொம்ப ஆசார நேம நிஷ்டையுடன் நாலுபேர் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு வெகு தூரதேசங்களுக்குப் போவதினால் மத்தியில் அனேக ஆச்சாரக் குறைவுகள் யேற்

பட்டு அதினால் தாரியாக்கினியின் மகிமைக்குக் குறைவு யேற்படு
மென்று அபிப்பிராயப்பட்டே மந்திரரூபமாய் நடத்திக்கொண்டு
போய் வருவது இராம்ப ஸுகமானவழியென்று ஸ்வாமி நியமன
மாகி இருக்கலாமென்பதையும் மேற்கண்ட காரணத்தினால் கட்
டவண்டி சரிப்படாது அனுசிதமும் கூடயென்று ஸ்ரீமுகத்தில்
எழுதப்பட்டிருப்பதினால் கட்டவண்டியில் தாரியாக்கினியை ஏள
பண்ணப்படாதென்ற அபிப்பிராயம் ஸ்ரீ திருவுள்ளத்தில் ஏற்
பட்டிருக்கவில்லையென்பதையும் அறிந்து பாணிக்கிரகணமான
வுடன் அக்கினியைப் பாரியை ஸகிதம் குதிரை அல்லது கருப்பு
மாடு சிகப்புமாடு பூட்டிய ரதத்தில் அதற்கேற்பட்ட ரிக்குகளை
ஜெபித்து அதில் ஏள்ளப்பண்ணிக் கொண்டு மத்தியில் நதிபால்
விருக்ஷங்கள் முதலியதுகளைத் தாண்டி வருவதற்குப் பிராயச்
சித்தமாய் யேற்பட்ட ரிக்குகளையும் ஜெபித்துக்கொண்டு தன்
சொந்த கிராமம்போய்ச் சேர்ந்து பிரவேச ஹோமமுதலியதுகளைச்
செய்யலாமென்று யேற்பட்டிருக்கிற விதிகளைக்கேட்டு பிரவேச
ஹோமம் செய்வதற்கு பூர்த்தியே அந்தவிவாஹ லௌகிக அக்கினி
க்கு அவ்வளவு விதிகளைச் செய்யவேணுமென்று விதித்திருக்கும்
பொழுது விவாககால முதற்கொண்டே யேற்பட்டு நடந்து வரு
கிற தாரியாக்கினிக்கு அப்பேர்ப்பட்ட விதிகளை அதிக பரிசுத்த
மாய் பயபக்தியுடன் நடத்தவேண்டியது அவசியமென்பதையுண
ர்ந்து அடியேனுடைய பிரதிஞ்ஞைக்கு லோபமன்னியிலும் ஷெ
தாரியாக்கினியின்மகிமைக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீமனத்துக்கும்
யாதொரு பங்கமும் நேரிடாமலும் ரொம்ப பரிசுத்தமாய் ஆசார
நேமநிஷ்டையுடன் கஷ்டத்தையும் சிலவையும் பாராமல் பகவா
னுடைய திருநாமங்களை மனசில் தியானித்துக்கொண்டு அக்கி
னிப்பெட்டி பெருமாள்பெட்டி மடிசஞ்சிபாத்திரம் முதலியசாமா
ன்கள் அடங்கிய சாக்குமூட்டை ஆக நாலு சாமான்களும் அடி
யேனும் அடியேனுடைய பாரியையும் ஒரு குதிரை வண்டியிலும்
வேதாத்தியயனம் பண்ணாமல் "ஹரிஓம்" என்று சரியாய் சொல்
லுவதற்கே தெரியாமலிருக்கிற அடியேனுக்கு எந்தக்காரியத்தை
யும் பிரகஸ்பதி யன்னியில் செய்யக்கூடாதென்று நிச்சயித்து

விவாககால முதற்கொண்டே வஸிஷ்டராயயேள்ளியிருந்து ஔபாஸனமுதலியதை நடத்திவைத்து அநுக்கிரகித்துக்கொண்டு வருகிற ஸ்ரீ இராமச்சந்திராச்சாரியார் ஸ்வாமியை பாரியைசகிதர் இன்னொரு குதிரை வண்டியிலும் யேளப்பண்ணி அக்கினிபெருமாள் எள்ளி யிருக்கப்பட்ட வண்டியை அன்னியர்களைக் கொண்டு ஸாரத்தியம் பண்ணும்படி செய்விக்கும் விஷயத்தில் அவர்கள் அடியேனுடைய மனசுக்குத் திருப்தியாய் ரொம்ப பரிசுத்தமான ஆசார நேம நிஷ்டையுடனிருந்து ஸாரத்தியம் பண்ணமாட்டார்களென்றும் அப்படி அவர்கள் ஸாரத்தியத்தின்பேரில் புறப்பட்டுப்போய் மத்தியில் அக்கினி சாந்தமாகிவிட்டால் மனமானது கலங்கி துக்க ஸாகரத்தில் மூழ்கி பரிதவிக்கும்படி நேரிடுமென்றும் நினைத்து சாஸ்திரம் இடங்கொடுத்தாலும் அல்லது இடங்கொடுக்காமற் போனாலும் பூர்வத்தில் துரோணாச்சாரியார் கிருபாச்சாரியார் அஸ்வத்தாமன் முதலிய பிராமணோத்தமர்கள் ரத ஸாரத்தியம் பண்ணி யிருக்கிறார்களென்பதையும் பிராமணன் ஆபத்காலத்தில் ஒன்பது ஜோடி எருதுகளைப்பூட்டி நிலம் உழுது கிருஷிபண்ணி ஜீவிக்கலாமென்பதையும் அனுஸரித்து தாரியாக்கினியைப் பிரயாண காலத்தில் பரிசுத்தமாய்க் காப்பாற்றிக்கொண்டு வரும்பொருட்டு "அஹிம்ஸா பரமோ தர்ம:-" என்ற வசனத்துக்கு விரோதமாய் அடியேனால் ஏற்படும் ஸாரத்தியமானது பகவத் கைங்கரிய ரூபமாயிருப்பதாலும் அடியேனுடைய ஜீவனார்த்தமாய்ச் செய்யப்படாததாலும் அதற்கு எவ்வித தோஷமும் பிராப்தமாகாதென்ற மனோதிடத்தின்பேரில் அக்கினி பெருமாள் யேள்ளி யிருக்கப்பட்ட வண்டியை சூத்திரஸ்பரிசம் சர்ம்ம ஸம்மந்தம் முதலிய தோஷங்களுக்கு இடமன்னியில அடியேனாலும் ஸ்ரீ இராமச்சந்திராச்சாரியார் ஸ்வாமி யேள்ளி யிருக்கப்பட்ட வண்டியை வண்டிக்காரர்களாலும் ஓட்டிக்கொண்டு போக வேண்டியதாய்த் தீர்மானித்து அடியேனால் ஓட்டப்படும் வண்டியை நன்றாய் முதலில் ஜலம் விட்டு அலம்பி அப்பால் புண்ணியாவசன தீர்த்தத்தால் வண்டியையும் குதிரையையும் புரோக்ஷி

க்கவேண்டிய ரிக்குகளைச் சொல்லி புரோக்ஷித்து அக்கினியை வண்டிக்கு யேள்ளப்பண்ண வேண்டியதற்குள்ள ரிக்குகளைச் சொல்லி யேளப்பண்ணி போகும் மார்கங்களில் வரும் நதிபால் விருக்ஷம் முதலியதுகளின் மத்தியில் அக்கினியை யேள்ளப் பண்ணிக்கொண்டு வந்ததினால் யேற்பட்ட தோஷத்துக்குப் பிரா யச்சித்தமாய் அதற்கு யேற்பட்ட ரிக்குகளை ஜெபித்துக்கொண்டு இறங்கவேண்டிய ஊர்போய்ச் சேர்ந்தவுடன் வண்டியிலிருந்து சாமான்களை இறங்கிவிட்டு தீர்த்தமாடப் போகாமல் யேனெனில் அடியேனும் அடியேன் பாரியையும் ஆச்ரமமாய் வண்டியில்உட் கார்ந்துகொண்டு போயிருந்தபோதிலும் போகும் மார்கங்களில் அறியாமல் சமீபத்தில் வரும் பிரயாணிகளின் தீட்டானது வண் டிக்குள் இருந்தபோதிலும் ஸ்தூல சரீரத்தை பாதிக்குமே யொ ழிய பெருமாள் அக்கினி அசேதன வஸ்துக்கள் முதலியதுகளை பாதிக்காது என்ற நிர்ணயத்தின்பேரில் முதலில் தீர்த்தமாடி அப்பால் வண்டியிலிருந்து யேள்ளப்பண்ண வேண்டியதற்குள்ள ரிக்குகளைச் சொல்லி யிறங்கி இவ்விதமாய் பிரகஸ்பதி ஸ்ரீ இராமச் சந்திராச்சாரியார் ஸ்வாமி ஸகாயத்தின்பேரில் சென்ற ஆனி மாதம் சுக்கிலபக்ஷம் பிரதமை அன்று இவ்விடத்தில் தரிசஸ்தாலீபாகத் தை நடத்திக்கொண்டு அடியேனுக்கு ஸ்ரீமத்ராமாயண பாராயண த்தை தினந்தோறும் யேள்ளியிருந்து நடத்திவைத்து அதின் ஸாரத்தை போதித்து அனுக்கிரகித்து வருகிற வால்மீகி மஹரிஷி யாய் யேள்ளியிருக்கிற வித்துவான் ஸ்ரீவெங்கிடாச்சாரியார் ஸ்வா மியால் நிர்ணயிக்கப்பட்ட அன்று தினமே இரண்டுகுதிரை வண் டிகளில் பிரயாணமாகி ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளை சிரசில் வகித்து திருநாமங்களை கியானித்துக்கொண்டே புறப்பட்டுமேல் கண்ட பிரகாரமே நடத்திக்கொண்டு அடியேன்கனிஷ்ட பிதாவின் குமாரத்தி கல்யாணத்திற்கு தாரியாக்கினிஸகிதம் அஞ்ஞானத்தி னால் வருவதாய்ச்சொன்ன வார்த்தையை நிறைவேற்ற ஸ்ரீ அழகிய சிங்க கிருபாகடாக்ஷ தைரியத்தினால் மதுரையில்நடந்த கல்லி யாணத்துக்குப் போய்ச் சேர்ந்து இருந்துவிட்டு அப்பால் அவ்

விடத்திலிருந்தே அடியேனுடைய ஜெனன பூமியாகிய நவபா ஷாணம் போய் ஆதிசேதுவில் தீர்த்தமாடி ஸ்ரீப்பிரும்மரிஷி யால் யேற்பட்ட அடியேனுடைய ரேகைசாஸ்திரத்தில் பீடா பரி காரார்த்தமாய் தனுஷ்கோடியில் செய்யும்படி சொல்லப்பட்ட தா னங்களைச்செய்யும்பொருட்டு மண்டபம் வரையில் குதிரை வண் டியிலேயே போய் அப்பால் பாம்பன் ஆற்றை தாரியாக்கினி ஸகி தம் கடப்பதற்காக சித்தப்படுத்தி வைக்கப்பட்டிருந்தநாவலுக்கு புண்ணியாவாசனம்செய்து கிரமப்படி ரிக்குகளைச்சொல்லி அதில் யேளப்பண்ணி பாம்பன் ஆற்றைத்தாண்டி பாம்பனிலிருந்து கருப் புமாடு சிகப்புமாடுபோட்டவண்டியில்தான் யேளப்பண்ணவேண் டுமென்கிற விதிப்பிரகாரம் அப்பேர்ப்பட்டவண்டியிலேயேயேள் ளப்பண்ணிக்கொண்டு தனுஷ்கோடிபோய் தீர்த்தமாடி தானங்க ளைச் செய்துவிட்டுத்திரும்பி அதேமாதிரியாய்மண்டபம்வந்து சே ர்ந்தமேல் எதாப்பிரகாரம் குதிரை வண்டியிலேயே தெர்ப்பஸய னம் போய் தீர்த்தமாடி பெருமாளை ஸேவித்துக்கொண்டு இராம நாதபுரம் தேவக்கோட்டை அரியக்குடி புதுக்கோட்டை ஸ்ரீரங் கம் லெக்ஷிமிபுரம் மார்க்கமாய் அங்கங்குள்ள பரம பாகவதாளை ஸேவித்து அனுக்கிரகத்தை பெற்றுங் கொண்டு ஸ்ரீ அழகிய சிங்கரின் கிருபாகடாக்ஷ வீக்ஷண்யத்தினால் சென்ற ஆவணிமாதம் சுக்கிலபக்ஷம் பௌர்ணமியன்று இவ்விடம் லெளக்கியமாய்வந்து சேர்ந்து பிரகஸ்பதி ஸ்ரீ இராமச்சந்திராச்சாரியார் ஸ்வாமி வித்து வான் ஸ்ரீ வெங்கிடாச்சாரியார் ஸ்வாமி இவர்களைக்கொண்டு மறுதினம் பௌர்ணமி ஸ்தாலீபாகம் நடந்தவுடன் இவ்விடத் திலுள்ளவர்களுக்குயேற்பட்ட ஆநந்தத்தை அடியேனுக்கு இதில் எழுத சாமார்த்தியம்போறாமல் இவ்விதம் யேற்பட்டதின் கார ணம் ஸ்ரீ அழகிய சிங்கர் மகிமையே யல்லாது வேறல்லவென்று அப்பொழுது அங்குள்ளவர்களுக்குப் பிரதி யுத்தரம் சொல்லும் படி எனக்கு கிடைத்தது அளவிலாப் பெரும் பாக்கியம்.

5. அப்பேர்ப்பட்ட பாக்கியமானது அடியேனுடைய பிர யாணம் தாரியாக்கினிஸகிதம ஆசார மேனிஷ்டையுடன் பக்தி

சிரத்தையாய் யாதொருவிதமான சங்கடம் தேக அசௌக்கிய மில்லாமல் நிர்விக்கினமாய் அடியேனுடைய ஆச்சாரியரான ஸ்ரீமது அஹோபில அழகிய சிங்கரின் கிருபா கடாக்ஷத்தினுல் நிறைவேறினதின் மூலமாய் கிடைத்ததென்று காரணங்களை யெடுத்து காண்பிவிக்காமல் சொல்லும் பக்ஷத்தில் நம்புவதற்கிட மில்லாமல் முகஸ்துதியாய் தோன்றுமென்பதை யுத்தேசித்து அந்தக் காரணங்களை பெடுத்துரைக்க வேண்டிய தவசியமாகை யால் அவைகளை கற்றறிந்த பெரியோர்களும் உற்றுக் கேட்கும் விஷயத்தில் அவர்களுக்கும் அவரவர்கள் ஆச்சாரியினிடத்தில் அதுவரை யேற்பட்டிருக்கும் பயபக்தியைக் காட்டிலும் இன்னும் அதிகமாய் யேற்படும்படி செய்யுமென்பதற்கும் அப்பேர்ப்பட்ட காரணங்களிரண்டி லொன்று அஞ்ஞானிகளுக்கு மறைவுதலா யும் மற்றொன்று அந்த அஞ்ஞானிகளுக்கும் ஆச்சாரிய பக்தி யுண்டாகும்படி செய்விக்கு மென்பதற்கும் சந்தேகமே யில்லை யென்பது நிச்சயம்.

6. முதல் காரணம் யாதெனில் இவடம் இராபர்ட்சன் பேட்டையை விட்டுப் புறப்பட்டு அன்று இராத்திரி குப்பத் துக்கு சமீபத்திலிருக்கிற லெக்ஷ்மீபுரந்துக்குப்போய் அவடத்தில் யேளளி யிருக்கிற வரதராஜப் பெருமாளையும் பரம பாகவதாளை யும் ஸேவித்து அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு அவடத்தி லிருந்து பிரயாணமாகி முன்பின் குதிரை வண்டிகளே போயிராத மார்க்கத்தில் போய் சிரம அசாத்தியமான கணவாய்களையும் மலை களையும் யாதொருவிதமான சங்கடமன்னியில் தாண்டி கிருஷ்ண கிரிக்குப்போய்ச் சேர்ந்தது ரொம்ப ஆச்சரியப்படத்தக்கதென்று அவடத்திலுள்ளவர்கள் மூலம் அறிந்தவுடன் அடியேனுக்கு ஸ்ரீ அழகியசிங்கரின் கிருபாகடாக்ஷ மிருக்கிறதென்று பிறருக்குத் தெரியாமற் போனாலும் அப்பால் சேலம் போவதற்கு தருமபுரியை விட்டு பகல் 3 மணிக்குப் புறப்பட்டு 19 மைல் தூரத்திலுள்ள தொப்பூர் சத்திரத்துக்கு சாயங்காலம் 7 மணிக்குப் போய் சேர் ந்தவுடன் அந்த சத்திரத்தில் ஒரு பிராணியாவது யில்லாமல்

துஷ்ட மிருகங்கள் சௌக்கியமாய் வாழும்படியான விருக்ஷங்கள் நிறைந்த மலைங்காட்டில் வந்து சேர்ந்துவிட்டோமே யெப்படி யிந்தயிடத்தில் ஔபாஸனம் நடக்கப்போகிறது யெந்தவிதத்தில் அன்று இராத்திரி அவடத்தில் தங்கியிருந்து பத்திரமாய்ப் புறப் பட்டுப்போகப் போகிறோமென்று பெருங்கவலை கொண்டு வருத் தப்படுஞ் சமயத்தில் ஒரு பர்லாங்கு தூரத்தில் வெளிச்சத்தைக் கண்டு அந்தயிடத்தில்போய் விசாரிக்க அவன் அந்த சத்திரத்து காவல்காரன் யென்பதை அவன் மூலம் அறிந்து அவனை நம்பி உடனே அந்தசத்திரத்தில் இறங்கி யிருக்க பயந்து அவனுக்கு உபசார வார்த்தைகளைச் சொல்லி அவன்மூலம் 2 பர்லாங்கு தூரத்திலிருக்கிற குடியிருப்பில் ஒருபிராமணவீடு இருப்பதைக் கேட்டு அந்த இடம்போய் இராத்திரி இறங்கி ஔபாஸனத்தைப் பண்ணிக்கொண்டு போகலாமென்ற தைரியத்தின்பேரில் அங்கே போனமேல் அந்தபிராமணனுடையவீடு ஔபாஸனம்முதலியது நடத்துவதற்குப் போராத ரொம்ப சிறிய வீடா யிருந்ததை யுத் தேசித்து அவருடைய உதவியின் பேரில்தான் இராத்திரி ஔ பாஸனம் நடக்கவேணுமென்று பிரார்த்தித்ததில் அப்பால அவ ரே அந்த சத்திரத்துக்குவந்து அன்று இராத்திரி யெங்கள் பந் தோபஸ்துக்காக இரண்டுபேர்களைத் திட்டப்படுத்தி வைத்து யெங்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்து ஔபாஸனத்தை நடத்தி வைத்தவுடன் அடியேனுக்கு எற்பட்ட கவலை நீங்கி அப்போது அடியேன் மனசில் எவ்விதம் தோன்றியதோ அதை அவர்கள் முனைநிலையில் சொன்ன தென்னவெனில் அடியேனு டைய ஆச்சாரியனால் ஆராதிக்கப்பட்ட ஸாக்ஷாத் ஸ்ரீ அழகிய சிங்கர் நம்முடைய பக்தனின் சிஷ்யன் ஆச்சாரியனால் காலத்தை யனுசரித்து சரீர சௌக்கியத்துக்கு அனுகுணமாய் நியமிக்கப் பட்ட சுகமான வழியைப்பெரிதாய் பாராட்டாமல் பண்ணின பிரதிக்ஞையைக் காப்பாற்றும்பொருட்டு இப்பேர்ப்பட்ட மலைங் காட்டில்வந்து தவிக்கிறானே அவனுக்கு கட்டாயம்போய் உதவி செய்யவேணுமென்று ப்ரஹலாதனுக்கு ஸேவை கொடுத்தது

போல் தாங்கள் வந்து எனக்குச்செய்த உதவி மறக்கத்தக்க தில்லை யென்று சொல்லிஅவர் பேரைக் கேட்டதும் நரசய்யர் பென்று சொன்னவுடன் அந்தவூரில் வேறு பிராமணுள் ஒருவரும் இல்லாமலும் அவருடைய பெயர் வேறு பேராக யில்லாமலும் அவர்முகத்தில் மீசையிருக்கிறதையும் கவனித்துப் பார்க்கும் விஷயத்தில் அடியேனுடைய மனசில் உண்டான தோற்றம் வாஸ்தவமென்றே சொல்லவேண்டியதைத் தவிற வேறில்லையாகையால் அதற்காகத்தான் ஸ்ரீ அழகிய சிங்கரின் பக்திவிசேஷத்தினுல் ஸாக்ஷாத்நரசிம்மன் மனுஷியரூபமாய்வந்து அடியேனுக்கு உதவி செய்திருக்கிறதை அஞ்ஞானிகள் நம்பக்கூடாத மறைவுதலான விஷயம் யென்று சொன்னதின் காரணம்.

7. அப்பேர்ப்பட்ட அஞ்ஞானிகள் மேல்கண்ட விஷயத்தைக் கேட்டவுடன் புத்தியானது கொஞ்சம் பேதலித்திருக்கும் சமயத்தில் மற்றொரு வெளிப்படையான காரணத்தையும் எடுத்துச்சொல்லும் பக்ஷத்தில் ஆச்சாரிய பக்தியினுல்தான் எடுத்தகாரியம் நிர்விக்கினமாய் நிறைவேறுகிறதென்று அவர்களுக்கும் நம்பிக்கை யுண்டாகுமாகையால அது யாதெனில் தாரியாக்கினியை குதிரை அல்லது கருப்புமாடு சிகப்புமாடு பூட்டிய வண்டியில தான் யேள்ளப்பண்ண வேணுமென்று வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிற விதிகளை அனுசரித்து குதிரை வண்டியிலேயே ஏள்ளப்பண்ணிக் கொண்டுபோய்த் திரும்பி ஸ்ரீரெங்கத்துக்கு வரும் ரஸ்தாவில் 7-வது மயிலில் அக்கினிபகவான் ஏள்ளியிருக்கிற குதிரைவண்டியின் ஒருபக்கத்து அச்சு முறிந்துபோனதைப் பார்த்து கீழேயிறங்கி இன்னொரு குதிரைவண்டியில் யேள்ளப்பண்ண அதில் தோல்போட்டு பக்கத்து மெத்தைகள் வைத்துத்தைக்கப்பட்டிருக்கிற காரணத்தினுல் கூடாதென்று மனசினுல் வெறுக்கப்பட்டும் தலைமேலாவது அக்கினியை யேள்ளப்பண்ணிக்கொண்டு போகலாமென்று யோஜிக்குந் தருணத்தில் 10 நிமிஷத்துக்கு அப்புரம் வரப்போகிற பெறுங் காற்றுமழையினுல் அக்கினிக்கு அபாயம் நேரிடுமென்ற பயத்தின்பேரில் அவ்வித

முழம் எடுத்துக்கொண்டு போகக்கூடாதென்று நினைத்து மனங் கலங்கி வருந்துஞ் சமயத்தில் திரிகரணசுத்தியாய் ஆச்சாரியனை தியானித்துக்கொண்டே ஆச்சார நேமநிஷ்டையுடன் பக்தி சிரத்தையாயிருப்பவனுக்கு கட்டாயம் உதவிசெய்யவேணுமென்று நினைத்து அந்த சமயத்தில் தாரியாக்கினியை யேள்ளப்பண்ணிக்கொண்டு போவதற்கு விதித்திருக்கிற பிரகாரமே கருப்புமாடு சிகப்புமாடு பூட்டிய ஒருவண்டியை அவடத்தில் அகஸ்மாத்தாய் வந்து சேரும்படி செய்து அதைப்பார்த்ததும் அடியேனுக்கு மனமானது கொஞ்சந் தைரியத்தை யடைந்து அந்த வண்டிக்காரனிடமும் அந்தவண்டியில் யேறிக்கொண்டுவந்த பிரயாணிகளிடத்திலும் அடியேனுடைய கோரிக்கையைச் சொன்னவுடன் பிரயாணிகள் இறங்கி நடந்து போவதாயும் வண்டிக்காரன் தன் சாமான்களை அடியேனுடைய இன்னொரு குதிரைவண்டியில் போட்டுக்கொண்டு நடந்து வருவதாயும் அந்த மாட்டுவண்டியில் அக்கினிபெருமாள் பெட்டி சாமான் வகைராககளைப் போட்டுக்கொண்டு அடியேனை ஓட்டிக்கொண்டுபோக சம்மதிக்கிறதாயும் சொன்னவுடன் மாட்டுவண்டியைக் காலிபண்ணி தீர்த்தங்கொண்டுவந்து புண்ணியாவாசன மந்திரத்தை ஜெபித்து வண்டியையும் மாடுகளையும் புரோக்ஷித்து அக்கினிபெருமாள் பெட்டி இதுகளையேள்ளப் பண்ணினவுடன் ஆரம்பிவித்த காற்றுமழையால் யெல்லாரும் நனைந்துக்கொண்டே நடந்தும் அடியேனும் நனைந்துக்கொண்டே வண்டியை ஓட்டிக்கொண்டும் ஸ்ரீரங்கத்துக்கடுத்த உறையூருக்கு சமீபத்திலிருக்கிற புத்தூரென்ற அக்கிரகாரத்தில் வந்திறங்கி தீர்த்தமாடி அக்கினிபெருமாள்பெட்டி சாமான்களை மாட்டுவண்டியிலிருந்து இறக்கிக்கொண்டு வண்டிக்காரனுக்கு இஷ்டப்பிரகாரம் வெகுமதிகொடுத்து அவன் செய்த உபகாரம் மறக்கத்தக்கதில்லையென்று சொல்லி அனுப்பிவிட்டு மறுநாட்காலையில் குதிரை வண்டியை ரிப்பேர்செய்துகொண்டு அதில் யெதாப் பிரகாரம் யேள்ளப்பண்ணிக் கொண்டு ஸ்ரீரெங்கம் வந்து சேர்ந்தோம்.

இதில் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில் பண்ணின பிரதிக்ஞைக்கு லோபமன்னியிலும் ஆச்சாரியன் நியமனத்துக்கும் தாரியாக்கினியின் மகிமைக்கும் யாதொரு குறைவும் யேற்படாமல் அப்பேர்ப்பட்ட நடுமார்க்கத்தில் அச்சு முறியவே அதற்கு சாதகமாய் விதிப் பிரகாரம் கருப்புமாடு சிகப்புமாடு பூட்டிய வண்டி அகஸ்மாத்தாய் அந்தசமயத்துக்குச்சரியாய் வந்துசேர்ந்து அவர்களுமிறங்கி காலிபண்ணிக்கொடுத்து அக்கினியை ஏள்ளப் பண்ணி அடியேனையே ஓட்டிக்கொண்டு போகும்படி ஒப்புக்கொண்ட விஷயம் முக்கியமானது. அதிலும் அந்த இடத்துக்கு அந்த சமயத்திற்குச் சரியாய் அடியேனுக்கு பிரயாசையன்னியில் கருப்புமாடு சிகப்புமாடு போட்டவண்டியாய்வந்து தாரியாக்கினியை மழையினின்றும் காப்பாற்றினது அதிக அற்புதமானது. இக்கலியுகத்தில் கள்ளம்கபடு சூதுவாதன்னியில் திரிகரண சுத்தியாய் மாதா பிதா குரு இவர்களுக்குப்பயந்து அடங்கி ஸன்மார்க்கங்களை யறிந்து ஏகமனஸாய் ஆச்சாரியனிடத்தில் பக்தியை நாட்டி விசுவாசித்து யெந்தகாரியம் செய்ய ஆரம்பிவித்தாலும் அந்தகாரியத்தை நிர்விக்கினமாய் நிறைவேற்றிவைக்க பகவான் கங்கணதாரியாய் காத்து கொண்டிருக்கிறார் யென்பது மேல்கண்ட இரண்டு விஷயங்களினால் வியக்தமாய் ஏற்படுகிற தென்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம்.

8. அடியேன் ஞானம் வந்தமேல் விவாக காலத்தில் பரம பாகவதாள் முன்னிலையில் யாவத்ஜீவம் தவறுமல் பிரத்தியக்ஷத்தில் அந்த விவாக அக்கினியிலேயே ஔபாஸனம் செய்து வருவதாய் பண்ணின பிரதிக்ஞைக்கு விரோதமாய் நடக்க மனசு இடங்கொடுக்காமல் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸன்னதியிலிருந்துவந்த ஒரு கார்டில் கடைசியில் "அடியேனுடைய இஷ்டம்போல் செய்து கொள்ளுகிறது" என்று எழுதப்பட்டிருந்த நியமனத்தை சிரசில் வகித்து மேல்கண்டபடி யேற்பட்ட பிரயாணத்தில் தாரியாக்கினிக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனத்துக்கும் யேதேனும் அடியே

னால் அபசாரம் யேற்பட்டிருக்கும் விஷயத்தில் அதை க்ஷமித்துக்
கொள்ளவேணுமாயும் அதற்காக ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவடிக
ளில் அஞ்சலிபந்தனுப் நின்றுகொண்டு நியமனமாகிற பரிகாரத்
தைச்செய்து கொண்டு யெப்போதும் பயபக்தியுடன் ஸ்வாமியின்
திருவடிகளை ஆஸ்ரயித்துக்கொண்டே காலத்தை கழிக்கவேணு
மென்ற வெண்ணத்துடனிருப்பதாக்கண்டு ஸமர்ப்பிவித்த விக்
ஞாபன பத்திரிகையை அங்கீகாரம் பண்ணிக்கொண்டு "உபரி
உபரி பகவதனுக்கிரகத்தால் யெல்லாம் பரிபூரணமாய் நடக்கு
மென்று ஸ்ரீ அழகியசிங்கர் நியமனமாச்சுது" என்று வந்த ஸ்ரீ
முகத்தின் பிரபாவத்தைக் கேட்டவர்கள் அடைந்த ஆநந்தத்
துக்கு அளவேயில்லாத பேரானந்தம்.

9. அப்பேர்ப்பட்ட பேரானந்தத்தை அடைந்தவர்களின்
ஆக்ஞைப் பிரகாரம் இக்கலியுகத்தில் பாபம் அதிகமாய் விருத்தி
யடைந்து கொண்டிருக்கு மிக்காலத்தில் மனுஷியர்களால் செய்
துமுடிப்பதற்கு ரொம்ப அசாத்தியமானதும் மஹா ஆச்சர்யகர
மானதுமான இப்பேர்ப்பட்ட அற்புத விஷயங்களை யாவரும்
அறியும்படி செய்வதற்காக இப்பத்திரிகை மூலம் வெளிப்படுத்தி
யிருப்பதால் அன்னபக்ஷிக்கி ஒருபாத்திரத்தில் பாலைவைத்தால்
அதுயெப்படி நீரைப்பிரித்து பாலைமாத்திரம் சாப்பிடுகிறதோ
அத்தன்மைபோல் இதை கடாக்ஷிக்கும் கற்றறிந்த பெரியோர்க
ளும் நண்பர்களும் குற்றங்களை நீக்கிவிட்டு விஷயத்தை மாத்திரம்
அங்கீகாரம் பண்ணி சுருக்கத்தில் இவ்வுலகமானது ஒரு ஜெயி
லுக்கு ஸமானமாய்க் குற்றவாளிகளைக் கொண்டுவந்து ஜெயிலில்
அடைக்கும் தன்மைபோல் ஜீவாத்மாக்கள் இவ்வுலகில் பிறந்து
ஜெயில் கைதிகளைப்போல் கஷ்டங்களையெல்லாம் அனுபவித்து
நல்லநடத்தையுடன் தன் யோக்கியதையையும் மரியாதையையும்
மறுபடியும் அந்த ஜெயிலிலிருந்தே ஸம்பாதித்து யாதொரு தீங்
கும் செய்யாமல் கடைசியில் ரொம்ப யோக்கியனென்று வார்டர்
களால் ஜெயில் சூப்பிரண்டெண்டுக்கு சிபார்ஷ் பண்ணப்பட்டு
அந்த சூப்பிரண்டெண்டு மூலம் இராஜாவின் ஆக்ஞையால்

யெப்படி ஜெயிலிலிருந்து விடுதலை யாகிறார்களோ அதேமாதிரி யாய் இக்காலத்தில் மனுஷ ஜென்மம் யெடுத்தவர்கள் இந்த மாய்கை பூமியிலிருந்து இதையே சாசுவதமென்று நம்பிச் சிற்றின்பத்திலேயே மூழ்கி கெட்ட நடத்தையை யுடைய குற்றவாளிகள் அடிக்கடி ஜெயிலுக்குவந்து கஷ்டப்படுவதுபோல் யெடுத்த ஜென்மத்தைப் பாழாக்கிக் கொள்ளாமல் கள்ளம் கபடு சூது வாதன்னியில் ஸத்தியத்தை உறுதியாகக்கைப்பிடித்து திரிகரண சுத்தியாய் மாதா பிதா குரு இவர்களுக்கு பயந்து அடங்கி ஸன் மார்க்கங்களை யறிந்து ஒரேமனஸாய் அவரவர்கள் குலாச்சாரியாரிடத்தில் பக்தியை காட்டி விசுவாசித்து நடந்துவந்தால் நிச்சியமாய் இகபர சுகங்களையும் மோக்ஷத்தையும் அடைவார்களென்பதையும் அப்பேர்ப்பட்ட ஆச்சார்யனிடத்தில் அபார சக்தி குணதிசயங்களில்லாமலிருந்தாலும் சிஷ்யர்களுடைய மனசில் மஹா சிறப்புடையதாய் நினைக்கப்படும் பக்தி விசேஷத்தினாலேயே அப்பேர்ப்பட்ட ஆச்சாரியாள் பிரத்தியக்ஷ தெய்வமாகத் தோற்றப்படுவார்களென்பதையும் இவைகளுக்கெல்லாம் ஆச்சாரிய பக்தியே முக்கிய காரணமா யிருக்கிற தென்பதையும் அப்பேர்ப்பட்ட ஆச்சாரியனுடைய கிருபைக்கு பாத்திரராகி இகபர சுகங்களையும் மோக்ஷத்தையும் யாவரு மடையப் பிரயாசப்படவேண்டியது முக்கியமான விஷயமென்பதையும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்ற தைரியத்தின் பேரில் இவ்வளவு விரிவாய் எழுதப்பட்டிருக்கிற இப்பத்திரிகையை ஆதிமுதல் கடைசிபரியந்தம் கொஞ்சங்கூட அருவெறுப்பன்னியில் ரொம்ப சிரத்தையுடன் வாசித்து இதன் விஷயத்தையறிந்து ரொம்ப சிலாக்கியமாய்க்கொண்டாடி அதன்படி நடப்பவர்களுக்கும் அந்தப் பிரகாரம் நடக்குப்படி செப்பவர்களுக்கும் தாஸானு தாஸனாய்க் காத்துக் கொண்டிருக்கிற

கோலார் ஜில்லா
இராபர்ட்ஸன் பேட்டை
1—12—1919.

நவபாஷாணம்,

**கோதண்டராமன்.**

THE
ORIENTAL STEAM
PRESS,
BOWRINGPET.